2 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 410/2019

12.11.2025 பி.வா.சா. 1 திரு.சமுத்திரம்

(1969ம் ஆண்டு 54 வது விதியின் 9வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1, நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்கு மூலத்தில் பிராது தபசில் சர்வே நம்பரில் பொது மக்கள் 100 வருடமாக குடியிருக்கிறார்கள் என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு வழங்கப்பட்டதாக கூறிய பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டாவை என்னிடம் தாக்கல் செய்ய கேட்காததால் நான் தாக்கல் செய்யவில்லை. எனது மனைவி பெயருக்கு பட்டா இல்லாததால் தான் பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பூர்வீகம் சுரண்டை. 1970 ம் ஆண்டு பிராது தபசில் சர்வே நம்பர் சொத்திற்கு வந்தேன். 1970ம் ஆண்டிலிருந்து பிராது தபசில் குடியிருந்து வருவதாக காட்டும் வகையில் ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. எனது மனைவி பெயரில் பட்டா 1994ல் வழங்கப்பட்டது. அந்த இடத்தில் வீடு கட்டவில்லை. தகராறு இருப்பதால் வீடு கட்டவில்லை. தகராறு இருப்பதாக வாதிகள் மீது நான் புகார் அளிக்கவில்லை என்றால் பல புகார்கள் அளித்துள்ளேன். புகார் அளிக்காததால் தான் புகார் அளித்ததற்குரிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.5 ஆவணம் என்ன என்றால் காலி மனை தீர்வை ரசீதுகள். நான் 2021ம் ஆண்டு தான் தீர்வை செலுத்த ஆரம்பித்தேன் என்றால் சரிதான். 2015 – 2016 முதல் உள்ள தீர்வையை நான் 2021ம் ஆண்டு செலுத்தினேன் என்றால் சரிதான். 2021ம் ஆண்டு தான் எனது மனைவி பெயரில் தீர்வை செலுத்துவதற்கான விண்ணப்பம் முதன் முதலாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணம் வழக்கு தாக்கல் செய்யத பின்பு வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 1 முதல் 4 ஆவணங்கள் எனது மனைவி மற்றும் வாதிகள் வழக்கு நடத்தியதற்கான ஆவணங்கள் என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள வழக்குகள் எப்படி முடிந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சுரண்டையை

பூர்வீகமாக கொண்ட நான் பிராது தபசில் சொத்திற்கு வந்து குடியிருந்ததாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகளின் முன்னோர்கள் 100 ஆண்டுகளுக்கு மேலாக பிராது தபசில் சர்வே எண் சொத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பட்டா வழங்குவதற்கு எனக்கோ எனது மனைவிக்கோ அரசிடமிருந்து எந்த அறிவிப்பும் வரவில்லை என்றால் அந்த பட்டாவை வழங்க நான் தான் மனு அளித்தேன். எனது பெயரில் மனு அளித்தேனா அல்லது எனது மனைவி பெயரில் மனு அளித்தேனா என்றால் ஊர் மக்கள் பெயரில் மனு அளித்தோம். மேற்படி மனுக்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யலாம். வாதிகளின் தகப்பனாரை தெரியும். அவரும் பல வருடங்களாக அங்கு குடியிருந்தார் என்றால் சரிதான்.

4. வாதிகளின் தகப்பனார் மற்றும் வாதிகள் குடியிருந்த இடத்தை தான் நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராது தபசில் சர்வே எண்ணில் எனக்கு எந்த இடத்தில் பட்டா ஒதுக்கினார்கள் என்பதை நான் தான் நிரூபணம் செய்யவேண்டும் என்றால் சரியல்ல. பிராது தபசில் சர்வே சொத்து முழுவதும் விவசாய நிலம் என்றால் சரியல்ல. எனது மனைவி பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்ய நான் கடமைப்பட்டவர் என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்யலாம். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.6 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைத்தக்கது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக நடந்த சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

upload on
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2025.11.25 19:29:16 +0530

2 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி